# தருமபுரி - காவிரி உபரிநீர் திட்டம்; தமிழ்நாடு அரசு உறுதி!

## சட்டப்பூர்வமாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் !

**சென்னை. அக்.4**

**தமிழ்நாட்டின் வேளாண் பெருமக்களின் நலன் பாதிக்கப்படாத வகையில் காவிரி ஆற்றில் கிடைக்கப்பெறும் உபரிநீரை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகளில் உள்ள ஏரிகளில் நிரப்புவதற்கான, தருமபுரி காவிரி உபரிநீர் திட்டத்தைச் செயல்படுத்திட, சட்டப்பூர்வமாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் - என்றும், இவ்வரசு பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்ட வேளாண் பெருமக்களுக்கு பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளும், திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும், தமிழ்நாடு அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாட்டின் வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கவும், அவர்களுக்கு பல்வேறு புதிய திட்டங்களை வழங்கிடவும் தமிழ்நாடு அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, நீர்வளத்துறை, பட்டு வளர்ச்சித் துறை போன்ற துறைகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில், சிறுதானியங்கள் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் (உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் ஊட்டச்சத்து மிக்க சிறுதானியம்). உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் மக்காச்சோளம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் தரிசு நில மேம்பாடு திட்டம் மற்றும் திரவ உயிர் உரங்கள் விநியோகம் ஆகிய திட்டங்கள் 6.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 11.12 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு 57,808 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

பயறுவகைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 8.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 20,308 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடையவதற்காக 2.65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 10,312 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் கடந்து மூன்று ஆண்டுகளில், பருத்தி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக திட்டங்கள் 22.66 இலட்சம் ரூபாய் நிதி செலவில் செயல்படுத்தப்பட்டு 1,128 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வரசு பொறுப்பெற்ற பின் 59,963 விவசாயிகளுக்கு 28.23 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தானியங்களில் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கு 4,448 தார்ப்பாய்கள் 36.86 இலட்சம் ரூபாய் செலவில் 4,448 விவசாயி களுக்கும், நெற்பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு, 23.87 இலட்சம் ரூபாய் நிதி செலவில் 9,520 ஏக்கருக்கு துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் சுமார் 4,450 விவசாயிகளுக்கும் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 5,511 வேளாண் கருவி தொகுப்புகள் 75.46 இலட்சம் ரூபாய் நிதி செலவில் 5,511 சிறு, குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் பொது விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்திலும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், “பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி” திட்டத்தின்கீழ் இதுவரை, 59.41 கோடி ரூபாய், 99.025 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடி மானியமாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

அட்மா திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த 641 பயிற்சிகள், 146 கண்டுணர் பயணங்கள். 37 பண்ணைப் பள்ளிகள் மற்றும் 1,575 செயல் விளக்கத் திடல்கள் 1.51 கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்டு 26,300 விவசாயிகள் பயனடைந்து உள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 7.53 கோடி ரூபாய் நிதி செலவினத்தில், 158 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப் பட்டதில் 1.89 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், “தமிழ் மண்வளம்” இணையதளம் வாயிலாக, புல எண் மற்றும் புவியிட குறியீடு கொண்டு, இதுவரை 1,605 மண் வள அட்டைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு விவசாயியும் தங்கள் நிலத்தின் மண்ணின் தன்மை, கார அமிலநிலை, சத்துக்களின் அளவு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

மேலும், வேளாண் காடுகள் திட்டத்தின்கீழ் 1.11 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த நிலையான பசுமைப் போர்வை இயக்கம் செயல்படுத்தப்பட்டு, 7.34 இலட்சம் மரக்கன்றுகள் விளைநிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளன. வருங்காலங்களில் இப்பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு, நிலையான மழைநீர் பெற்றிட உதவிடும் என்பது உறுதி.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில், நுண்ணீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சிறு/ குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 75% மானியத்திலும், சொட்டுநீர்ப்பாசனம், தெளிப்பான், மழைத்தூவுவான் போன்றவை 45.08 கோடி ரூபாய் நிதியில் 6,488 விவசாயிகளுக்கு 10,693 ஏக்கரில் நுண்ணீர் பாசனம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா) 435 மெட்ரிக் டன் நெல் விதைகளும் 498 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகளும் 489 மெட்ரிக் டன் பயறுவகை விதைகளும் 443 மெட்ரிக் டன் எண்ணெய் வித்து விதைகளும் 1,865 மெட்ரிக் டன் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில், தொகுப்பு அணுகுமுறை மூலம் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள, அங்ககச் சான்றிதழுடன் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க, 202324 ஆம் ஆண்டில் 67.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் 1000 ஏக்கர் பரப்பளவில் 20 அங்கக வேளாண்மைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு 502 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், 900 எண்கள் ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 50 சதவீத மானியத்தில் 3.55 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தில், 767 எக்டரில் சிறுதானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் நிலக்கடலை பயிர்கள் 33.18 இலட்சம் ரூபாய் நிதி செலவினத்தில் 1,638 விவசாயிகளும், நெல்லுக்குப்பின் பயிர் சாகுபடி திட்டத்தில், 1,249 எக்டரில் உளுந்து பயிர் 12.33 இலட்சம் ரூபாய் நிதி செலவினத்தில் 1,002 விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.

2021-22-ஆம் ஆண்டில் 4,124 எக்டர் பரப்பளவில், மக்காச்சோளப் பயிரில், அமெரிக்கன் படைப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்திட, 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,200 விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. மேலும், தென்னையில், வெள்ளை சுருள் ஈஜ கட்டுப்படுத்திட,

2021-22 ஆம் ஆண்டில், சுமார் 200 எக்டர் பரப்பளவில், 2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல், கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள், 200 விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு, தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில், 2.5 கோடி ரூபாய் நிதி செலவில் அரூர் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களும், 2.20 கோடி ரூபாய் நிதி செலவில் 5 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் கட்டப்பட்டுள்ளன, நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் 2,863 விவசாயிகளுக்கு 1.31 கோடி ரூபாய் இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டுள்ளதோடு, பல்வேறு உழவர் நலத் திட்டங்களில் 133.87 கோடி ரூபாய் நிதி செலவில் 3 இலட்சத்து 32 ஆயிரத்து 556 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் துவரை சாகுபடி பரப்பு விரிவாக்க இயக்கம் மற்றும் துவரை உற்பத்தி விரிவாக்க திட்டத்தின் மூலம் 15,181 எக்டேர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

### தருமபுரி காவிரி உபரிநீர் திட்டம்!

காவிரி ஆற்றில் கிடைக்கப்பெறும் உபரிநீரை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகளில் உள்ள ஏரிகளில் நிரப்புவதற்கான, தருமபுரி காவிரி உபரிநீர் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று விவசாயப் பெருமக்களிடமிருந்து பல ஆண்டுகளாக கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இந்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, பென்னாகரம் வட்டத்தில் உள்ள நெருப்பூர் அருகே, காவிரி உபரிநீரை எடுத்துப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு குறித்து நீர்வளத்துறை ஆராய்ந்து வருகின்றது.

காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில், காவிரி நதியின் உபரிநீரைப் பயன்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் குறித்து, பல்வேறு நிலைகளில் வழக்குகள் நிலுவையில் இருக்கக்கூடிய சூழ்நிலையில், தமிழ்நாட்டு வேளாண் பெருமக்களின் நலன் பாதிக்கப்படாத வகையில் இந்த கோரிக்கையைச் செயல்படுத்துவது குறித்து சட்டப்பூர்வமாக ஆராய்ந்து இதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு உறுதியாக எடுக்கும்.



சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த சென்னை மேற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆர்.என். துரையின் தாயார் திருமதி ஆர்.கண்ணம்மாள் அவர்கள் மறைவெய்தினார். செய்தியறிந்து, கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் இல்லத்துக்குச் சென்று மறைந்த அவருடைய தாயாரின் உடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தாயாரை இழந்து வாடும் துரை மற்றும் அவர்களுடைய குடும்பத்தார், நண்பர்களுக்கு ஆறுதலையும் , இரங்கலையும் தெரிவித்தார்.

## தாய்க் கழகத்திற்கு முத்து விழா:

# சமூக அரசியல் வடிவம் பெற்று சாதித்துள்ள தி.மு.க.விற்கு பவள விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

**சென்னை, அக். 4-**

**ஒரு நூற்றாண்டிலேயே தன்னால் உருவாக்கப்பட்ட ஓர் இயக்கத்தின் வெற்றியை நேரில் கண்டு மகிழ்ந்த தலைவர் தந்தை பெரியார் - இயக்கம் திராவிடர் இயக்கம் மட்டுமே - அதற்கு முத்து விழா; திராவிடர் இயக்கத்தின் கொள்கைகளை செயல் மலர்களாக்கிப் பவள விழா காண்கிறது தி.மு.க. என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

திராவிடம் என்ற வரலாற்றுக் கடலில், ஏராளமான முத்தும், பவளமும் அணி அணியாக நமக்கு உள்ளதில் அள்ளிக் கொண்டே இருப்பதால்தான், அறிவால் அடிமைப்பட்டு, உணர்வால் மரத்துப்போன நமது திராவிட இனம், கடந்த ஒரு நூற்றாண்டுக்குமேலாக ஏற்றமிகு, ‘மான எழுச்சியைக்’ கண்டு உயர்ந்து வருகிறது.

### புதிய விடியலைத் தந்த நீதிக்கட்சி!

‘நீதிக்கட்சி’ என்று வெகு மக்களால் அன்று எளிமையாக அழைக்கப்பட்ட திராவிடர் இயக்கம், அரசியலில் கால் பதித்து, இழந்த நம் இன உரிமை மனித உரிமைகளை மீட்டெடுத்து ஒரு புதிய விடியலை நாட்டுக்குத் தந்தது!

‘திராவிடம் - திராவிடர்’ என்பது ஏதோ ஒரு குறுகிய பகுதியோ, குறுகிய எண்ணத்தையோ மய்யப்படுத்தி முளைத்த தத்துவம் அல்ல!

### திராவிடம் ஒரு தத்துவத்தின் பண்பொழில்!

மொழியால், பண்பாட்டால், நாகரிகத்தால், மானுடத்தையே தனது நேசிப்புக்குரிய எல்லையாக்கிக் கொண்டு, யாதும் ஊரே, யாவரும் கேளிர், உலகம் ஓர் குலம், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சமத்துவம், உழைப்பையே அளவாகக் கொண்டு உயரும் உன்னத சமநிலை, சம ஈவு இவற்றை உலகெங்கும் விதைத்து வளர்ந்த, வளரும் ஓர் அருமையான எடுத்துக் காட்டாகும்!

108 ஆண்டுகளுக்குமுன் அது பல பெயர்களைச் சூட்டிக்கொண்டே (அவை மக்களால் சூட்டப்பட்டவை) வளர்ந்தது.

சிந்துவெளி நாகரிகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வெளிச்ச நாகரிகம்!

அதற்கு நேர் எதிரான மற்றொரு தத்துவம்தான் ஆரியம்! மனிதர்களை - மனிதர்களாகவே மதிக்காது கீழே தள்ளி, மிருகங்களைவிடக் கேவலமாக்கி, ஆதிக்கம் செலுத்தி, அதற்குப் பாதுகாப்பு அரணாக கடவுள், மதம், ஜாதி, சடங்கு, சம்பிரதாயங்கள், புராணங்கள், இதிகாச போதைகளின் ஆதரவால் பட்டுப்போன நிலையிலும், வேரூன்றி, பளபளப்பை பரபரப்பாகக் காட்டும் ஒரு பாதகத் தத்துவம்!

இரண்டுக்கும்தான் பல நூற்றாண்டுகளாக கருத்தியல் போர் நடைபெற்று வருகின்றது, புத்தர்காலம் முதல்!

அதனை தமிழ்நாட்டில் உணரச் செய்து, அறிவு கொளுத்திய இயக்கம்தான் நூற்றாண்டைத் தாண்டி, சமூகத்தில் ஒருபுறத்தில் ஓர் அறிவுப் போர் நடத்தியும், அரசியலில் அதன் தத்துவங்களைச் செயல்படுத்தி, மானமும், அறிவும், உரிமைகளை மீட்டெடுக்க அரசியல் களமாட்டம் நடத்தும் ஒரு சூழல்; அத்திசையைக் காட்டி, அதில் முன்னோடியாக பாதையைச் செப்பனிட்டு புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றி, சமூகநீதிக் கொடி பறக்கும் புதியதோர் சமூகத்தினைப் படைக்கும் மற்றொரு அரசியல் குழல் என்ற இந்த இரட்டைக் குழல்களைக் கொண்ட ஒரு புதுமை அமைப்பாக நாளும் வரலாறு படைத்து வருகின்றன!

### திராவிடர் கழகம் தோன்றியது!

நீதிக்கட்சி, பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் என்ற பெயர்களை வரலாற்று அடிப்படையிலும், புதியதோர் உலகு படைக்க திராவிடர் கழகம் என்று மாற்றினார் தந்தை பெரியாரும், அவர்தம் தன்னலம்பாரா தகைசால் தோழர்களும் தொண்டர்களும்!

அதற்கு (திராவிடர் கழகத்திற்கு) கடந்த ஒரு மாதம் முன்பு முத்துவிழா - 80 ஆண்டுகள் - சேலத்தில் பெயர் மாற்றம் அடைந்து!

அது வெறும் பெயர் மாற்றம் மட்டுமல்ல; இரண்டின் (நீதிக்கட்சி - பார்ப்பனரல்லாதார் இயக்கம்) கலவையாகி ஜொலித்த தனித்தன்மை கொண்ட இயக்கமாக, “திராவிடர் கழகம்“ 1944 இல் சேலத்தில் புத்தாக்கம் பெற்று, புதியதோர் பாதை அமைத்தது.



முந்தைய பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற அரசியல் இயக்கமும், சுயமரியாதை இயக்கம் என்ற சமூகப் புரட்சி இயக்கமாகி, புதிய பரிமாணம் பெற்று வளர்ந்தது!

அதற்கு அய்ந்தாண்டுகளுக்குப் பிறகு, காலத்தின் தேவையாக, திராவிட முன்னேற்றக் கழகமாக அதன் அரசியல் அமைதிப் புரட்சிக்கான திராவிட இயக்கம் மலர்ந்தது.

அந்த முத்தும், பவளமும் இப்போது நமது மக்களுக்கு, இன வரலாற்று வெளிச்சம் பரப்ப தொண்டு செய்து வருகிறது - சாதனை சரித்திரத்தில் சமூக இழிவை நீக்கவும், சமத்துவ சமூகநீதிக் கொடி தலைதாழாது பறக்கவும்.

அரசியல் களத்தில் நின்று போராடும் இயக்கம் தி.மு.க.!

‘அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றம்; அனைவருக்கும் அனைத்தும் கிடைத்தலே எமது ஆட்சிக்கான இலட்சிய இலக்கு’ என்று பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி, மானுட உரிமைகளை முன்னெடுத்து அரசியல் களத்தில் போராடும் ஓர் இயக்கம் தி.மு.க.

அது ‘பவளத்தை’ தந்துள்ளது 75 ஆண்டுகளில்!

முத்துவிழாக் கொண்டாடும் அதன் தாய்க்கழகமோ கொள்கை முத்துக்களை மூழ்கி எடுத்து, “முத்துக் குளிக்க வாரீகளா?” என்று மக்களை அழைத்து, மான வீரர்களாக, சமத்துவ மனிதர்களாக, சமூகநீதிப் போராளிகளாக அவர்களைக் களத்தில் இறங்கி கம்பீரத்துடன் உலா வருகின்றது!

உலகில் எங்கும் காணாத ஒரு ஒப்பற்ற தனித்தன்மை பூண்ட இருபெரும் கூர்முனைகளைக் கொண்ட ஓர் அதிசய இயக்கங்கள் இவை!

பன்னூறு ஆண்டுகளில் காணாத சமூக மாற்றம் - ஒடுக்கப்பட்டு, உரிமை மறுக்கப்பட்ட ஓர் இனத்தின் எழுச்சி ஓங்கி, அதன் தத்துவ கர்த்தா முத்தும் பவளமும் மலையாக அணிந்து - “பெரியார் உலக மயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது!“

வெற்றிகளைத் தம் வாழ்நாளில் கண்டு மகிழ்ந்தவர் தந்தை பெரியார்

### எண்ணிப் பாருங்கள், விரலை மடக்குங்கள்!

1. உலகில் எந்த ஒரு பகுதியிலாவது ஒரு புரட்சி இயக்கத்தின் கொள்கை வெற்றிகளை அவர்தம் வாழ்நாளில் நேரில் கண்டு மகிழ்ந்து, மறைந்த தலைவர் தந்தை பெரியாரைத் தவிர வேறு உண்டா?

2. அவரால் உருவாக்கப்பட்ட சீடர்களே ஆட்சி அமைத்து, அவ்வாட்சியை, அவர் வாழ்ந்தபோதே, அவருக்கே காணிக்கையாக்கி சட்டமன்றத்தில் - அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஓர் ஆட்சித் தலைமை பிரகடனப்படுத்திய வரலாறு உண்டா?

1929 இல் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்களை, இந்த (தி.மு.க.) ஆட்சி நாயகர்களான தந்தை பெரியார்தம் தொண்டர்களின் ஆட்சியால் செயலாக்கம் பெற்று வருகின்றன - 1969 முதல் தொடர்ந்து இன்றைய ‘திராவிட மாடல்‘ ஆட்சி நமது ஒப்பற்ற முதலமைச்சரின் தலைமையில் நடைபெறும் இன்றைய காலகட்டம்வரை சோதனைகளைச் சாதனைகளாக்கி, சாதனை சரித்திரமாக மலரச் செய்து - வெற்றிக் கனிகளாக்கி, மக்களைச் சுவைக்க வைக்கும் வரலாறுதான், இந்த முத்தும், பவளமும்!

“ஆயிரம் ஆண்டெனும் மூதாட்டி
அவள் அணிந்திராத அணி (ஆம், முத்தும், பவளமும்)யாவார்
அவள் அறிந்திராத அறிவாவார் பெரியார்!”
- புரட்சிக்கவிஞர்

உலகம் பெரியார் மயம் -
பெரியார் உலக மயம் - புரிகிறதா?

இவ்வாறு கி.வீரமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அக்டோபர் 2ம் நாள் மகாத்மா காந்தியடிகளின் 156வது பிறந்த தினத்தை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம் கேளம்பாக்கம் சமூதாய நலக்கூடத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று கிராம மக்களுடன் கலந்துரையாடினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

# தமிழ்நாட்டின் வளர்ச்சியில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்துவார்!

## கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக்.4 -

“துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்துவார்” என்று கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து கழக மீனவரணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை வருமாறு:

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் என்று கூறுகிறார் வள்ளுவர். அதற்கேற்ப இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலினை துணை முதலமைச்சராக்கியிருக்கிறார் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

2019 ஜூலை 4 தேதி இளைஞரணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதில் இருந்து, அணியின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள், இதர அணிகளும் வியப்படையும் வகையில் இருந்து வருகின்றன. இளைஞர்களுக்கு அரசியல் கற்றுக்கொடுத்து கழகத்தை வலுப்படுத்துவதற்காக நிர்வாகிகளை தொடர்ச்சியாக சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

தி.மு.க.வை வலுப்படுத்த வேண்டும் என்ற தலைவரின் உத்தரவிற்கிணங்க, இதுவரை 25 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய இளைஞர்களை கழகத்தில் சேர்த்திருக்கிறார். இவைகளை வெறும் எண்ணிக்கையாகக் கணக்குக் காட்டாமல் எண்ணங்களின் சேர்க்கையாக மாற்றும் வகையில் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை ஏற்பாடு செய்து வருகிறார்.

அனல் பறக்கும் பிரச்சாரம்!

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு டு மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளில் 10 ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அனல் பறக்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டார் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின். வழக்கமான மேடைப் பேச்சு மாதிரி அல்லாமல், யதார்த்தமாக மக்களுடைய மொழியிலேயே கலந்துரையாடினார். எய்ம்ஸ் மருத்துவமனைக்காக நடப்பட்ட ஒரு செங்கலை வைத்து தமிழ்நாட்டை புறக்கணிக்கும் பா.ஜ.க. அரசை பட்டிதொட்டியெல்லாம் அம்பலப்படுத்தினார். 29 பைசா பதாகையை தூக்கிப் பிடித்து, பா.ஜ.க. அரசு நிதி கொடுக்காமல் தமிழ்நாட்டை சுரண்டுவதை மக்களுக்கு புரியவைத்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், நான் முதல்வன் உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் முத்தான திட்டங்களையும் பிரச்சார களத்தில் உதயநிதி ஸ்டாலின் எடுத்துரைத்த விதம், கோடிக்கணக்கான மக்களிடையே எளிதில் சென்றடைந்தது. இதனாலேயே அவருடைய பிரச்சார களத்திற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக ஆர்வத்துடன் வந்தனர்.

உதயநிதி ஸ்டாலினின் தனித்துவமான பிரச்சார யுக்தி, அரசியல்வாதிகளையும், ஊடகங்களையும் உற்று நோக்க வைத்தது. தி.மு.க.வை அடுத்த கட்டத்திற்கு கொண்டும் செல்லும் பிரச்சாரம் என விவாதமாக்கப்பட்டன. ஊடகங்களில் இதேபோன்று ஆட்சிப் பணியின் மூலமாகவும் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை உதயநிதி ஸ்டாலின் விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றதினால் தமிழ்நாட்டில் விளையாட்டுத்துறை புத்துயிர் பெற்றிருக்கிறது. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள், திருவிழா போன்று கோலாகலமாக நடத்தப்படுகின்றன.

மக்களுக்கான அரசியல்!

அமைச்சராக உதயநிதி ஸ்டாலினின் முயற்சியினால் தென் மாநிலங்களிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் மகளிரின் பங்களிப்பு அதிகம் என்பது மகத்தான சாதனை. ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் விளையாட்டு மைதானம், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை என விளையாட்டுத்துறையில் மேற்கொள்ளப்படும் சீரிய நடவடிக்கைகளினால், இளைஞர்கள் விளையாட்டில் அதிக அளவில் ஆர்வம் காட்டுவதை ஊடகங்களும் பாராட்டி வருகின்றன. விளையாட்டுத்துறையில் உலக மைதானமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது. இளைஞர்களின் மேம்பாடும் அரசியல் களத்தில் பேசப்படுகிறது. முதலமைச்சர் உருவாக்கிய சிறப்புத் திட்டங்களை மிகச் சிறந்த திட்டங்களாக மிகக் கவனத்துடன் கண்காணித்து வருகிறார்.

சமூகநீதிக்களமாக தமிழ்நாட்டை கட்டமைத்த பெரியார், அண்ணா வியக்கும் வகையில் மக்கள் பணி செய்து தமிழினத் தலைவராக, நாடு போற்றும் அரசியல்வாதியாக திகழ்ந்தார் கலைஞர். முத்தமிழறிஞர் கலைஞர் ஆசையின் படி பேர் சொல்லும் பிள்ளையாக நாடே திரும்பிப் பார்க்கும் வகையிலான மக்களுக்கான அரசியலை முன்னெடுத்து வருகிறார் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். கழகத் தலைவரின் நீட்சியாக அரசியலில் வெற்றி நடைபோட்டு வருகிறார் இளவல் உதயநிதி ஸ்டாலின்.

கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் என உதயநிதியின் பணிகள் அனைவரும் வியக்கும் வகையிலேயே இருந்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாக துணை முதலமைச்சராகவும் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் புது பாய்ச்சலை ஏற்படுத்துவார் உதயநிதி ஸ்டாலின்.

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் பங்கேற்ற முதல் நிகழ்ச்சியே மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை கௌரவிக்கிற நிகழ்ச்சி தான். இதன் மூலம் இளம் தலைவரின் அரசியல் தெளிவை தெரிந்துகொள்ள முடியும். துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலினின் செயல்பாடுகளால், இன்னும் பல வியக்கத்தக்க மக்களுக்கான அரசியலை தமிழ்நாடு காணும் என்பது நிச்சயம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.